PRAISE THE LORD

Full Gospel Pentecostal Church, Palayamkottai

Convention Songs

ஜெபவீடு,

பாளையங்கோட்டை.

"நான்பாடும்போது என் உதடுகளும் நீர் மீட்டுக் கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்" (சங்கீதம் 71;23)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தொடர்பு முகவரி:

பாஸ்டர் B. ஜான் மைக்கல்,
பூரண சுவிசேஷ பெந்தெகொஸ்தே சபை,
தூய சவேரியார் காலனி,
48C/6, ஜெபவீடு,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி - 5.

பாடல் 1

ஸ்தோத்தரித்தே பாடுவோம் - துதியின் நாதனையே

ஸ்தோத்திரத்தோடே துதி கனமகிமை
எல்லாம் உரியவனை - ஸ்தோத்தரித்

1 சென்ற காலமட்டும் தேவசுதன் நமை
நன்றாய் காத்தாரே
நன்றியோடே நாம் அவருக்கே என்றும்
சாற்றுவோமே - ஸ்தோத்திரம்
என்றும் நமக்கவர் இரக்கங்கள் செய்வதால்
இறைஞ்சுவோம் அவர் பாதம் - ஸ்தோத்தரித்

2. காலத்தின் கொடுமையால் கர்த்தனை விட்டு
கோலங்கள் பல கொண்டு
ஜாலங்கள் செய்தலால் உத்தமரை இன்று
காண்பதும் அரிது
ஓலமிடும் சுத்தர் ஜெபமதைக் கேட்கும்
தூயவனைத் துதிப்போம் - ஸ்தோத்தரித்

3. வேகமே வருவேன் என்றவரை இன்னும்
வரவும் காணோமே
சோகமே அடைந்தேன் நாயகன் எப்போ
வருவாரோ என்றே
மேகமீதேறி காதலன் வரும் நாள் களித்திடுவேன்
அன்றே - ஸ்தோத்தரித்

பாடல் 2

பாடுவேன் கர்த்தரை
கூறுவேன் நாமத்தை (2)

ஒருவராய் பெரும் அதிசயம் செய்திடும்
இயேசுவைப் புகழ்ந்திடுவேன்

1. அற்புதமானவர் - இவர்
அதிசயமானவர் (2)
ஆச்சரியமானவர் - இவர்
ஆலோசனை கர்த்தர்

2. இயேசு கிறிஸ்து - இவர்
இம்மானுவேலரின் (2)
இழந்து போனதை தேடிவந்த
இரட்சகரிவர்

3. உயிர்த்தெழுந்தவர்
உன்னதமானவர் (2)
உலகின் ஒளியாக வந்த
ஜீவரட்சகர்

4 மகா பரிசுத்தர் இவர்
சர்வ வல்லவர் (2)
ஜீவதண்ணீர் கொடுக்க வந்த
ஜீவ அப்பமிவர்

பாடல் 3

கலங்காதே மனமே திகையாதே மனமே
கன்மலையாம் கிறிஸ்து காத்திடுவார் தினமே

1. கவலைப்படாதே கண்ணீர் சிந்தாதே
கடைசிவரை நம்மை கைவிடமாட்டார்

2. அனாதி தேவனே உனக்கு அடைக்கலம்
அவரது புயங்கள் உந்தன் ஆதாரம்

3. அண்டிக்கொள் இயேசுவை அடைக்கலம் அவரே
ஆதரிப்பாரே அமைதிக்கொள் மனமே

4. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கண்ணின் மணிபோல் கனிவுடன் காப்பார்

பாடல் 4

பரிசுத்தம் தேவை உள்ளத்திலே
பரிகாசம் சகிப்போம் உலகத்திலே
பரலோக சிந்தை எண்ணத்திலே
பரனேசு வாஞ்சை வாழ்வினிலே

1. பாவமன்னிப்படைந்தோம் கிருபையால் மீண்டும்
பாவசேற்றில் விழாமல் வாழ்க்கையை காத்திடுவோம்
பிசாசின் வலையில் சிக்கிடாமல் என்றும்
பிதாவின் சித்தம் செய்து பரிசுத்தம் அடைவோம்

2. பெலத்தினால் பராக்கிரமத்தால் ஒன்றுமில்லை
பெலன் தரும் தேவனால் ஆகாததும் இல்லை
பேழையிலே நோவாவைக் காப்பாற்றினதேவன்
பேரழிவில் காத்திடுவார் பரிசுத்தவானை

3 பொறாமையும் பெருமையும் நமக்குள்ள தல்ல
பொறுமையை விட நல்ல ஆயுதமுமில்லை
போலியான பரிசுத்தம் நிலை நின்றிடாது
போதகராமேசுவின் பரிசுத்தம் தேவை

பாடல் 5

இயேசு தங்கும் வீடு - அது
இன்பம் நிறைந்தது
புதுபாடல் துதிபாடல் } 2
மனமகிழ்ச்சி நிறைந்தது

1 துன்பம் நிறைந்த உலகில் இயேசு
வார்த்தை புது பெலனே
இருள் நீங்குமே அருள்தாருமே
துயர் தீருமே ஒளி தாருமே

2. கர்த்தரை நோக்கிப் பார்த்தேன் - என்
கண்ணீர் யாவும் துடைத்தார்
கரை காண புது மகிழ்ச்சி
என் தேவன் தந்திட்டார்

3 இயேசு வருகை நாளே - மிக
சமீப மானதாலே
அல்லேலூயா பாடி - நானும்
ஆயத்த மாகிடுவேன்

பாடல் 6

துதிகளின் மத்தியிலே வாசம் செய்பவரே (2)

ஸ்தோத்திரம் பாத்திரனாம் கர்த்தாவே
ஸ்தோத்திரம் துதி உமக்கே

1. தூதர்களாலே ஸ்தோத்தரிக்கப்படுபவரே
தூதுகளாலே வாழ்த்தப்படுபவரே
துக்கங்கள் எல்லாம் அகற்றிவிட்டீரே
துயரங்கள் எல்லாம் மாற்றிவிட்டீரே

2. துன்பங்களை நீர் துடைத்துவிட்டீரே
தூரம் போகாமல் காத்துக்கொண்டீரே
உன் பக்கமாக இழுத்துக்கொண்டீரே
உம் பாதைகளில் நடத்துகின்றீரே

3. என்னை வெறுத்து உம்மிடம் வருகிறேன்
எந்தன் சிலுவை சுமந்து வருகிறேன்
என் சுயமெல்லாம் உதறி விடுகிறேன்
உம் சித்தம் செய்ய கிருபை தாருமே

4. தாகமாய் நானும் உம்மண்டை வருகிறேன்
தாகத்தை தீர்க்கும் ஜீவநதி நீரல்லோ
தாய்மறந்தாலும் மறவேன் என்றவரே
தாசன் நான் உம்மை துதித்து போற்றிடுவேன்

பாடல் 7

கர்த்தருக்கு நாம் புதுப்பாட்டு
துதியுடன் ஏறெடுப்போம்
ஆவிக்குள்ளாய் பாடி மகிழ்வோம்
இயேசுவைக் கொண்டாடிடுவோம்

நாமெல்லாரும் ஒன்று கூடி
இயேசுவை கொண்டாடிடுவோம்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
கர்த்தருக் கென்றும் ஸ்தோத்திரம் அல்லேலூயா (3)

1. பரமானந்த நற்செய்தி வானில்
பரலோக தூதர் கூறினார்
நம் இயேசு பிறந்தார் பெத்லகேமில்
நமக்கு இரட்சிப்பு வந்ததே - அல்லேலூயா (8)

2 பரன் இயேசுவின் சத்தியமார்க்கம்
புனித புது வழியே
மெய்பூரண சத்தியம் பறை சாற்றி
மகிமை ஊழியம் செய்குவோம் - அல்லேலூயா (8)

3. இன்ப இயேசுவே வாரும் விரைந்தே
இது நம் இறுதி ஜெபமே
நம் இயேசுவின் பொன்முகம் வேகம் காண்போம்
நடு வானில் வந்திறங்குவார் - அல்லேலூயா (8)

பாடல் 8

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு
வெற்றி வெற்றி வெற்றி வெற்றி (2)
அல்லேலூயா ... ... (8)

1. என்னென்ன துன்பம் வந்தாலும் } 2
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும் (2)
நான் சோர்ந்து போக மாட்டேன் (2)

2. தீ நடுவே நடந்தாலும்
நான் எரிந்துபோக மாட்டேன்
ஆறுகளைக் கடந்தாலும்
நான் மூழ்கிப்போக மாட்டேன்

3. என் இராஜா முன்னே செல்கிறார்
வெற்றி பவனி செல்கிறார்
குருத்தோலை கையில் எடுத்து
ஓசன்னா பாடிடுவோம் - நாம்

4. சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் இயேசு பறித்துக் கொண்டார்
சிலுவையில் அறைந்து விட்டார்
காலாலே மிதித்து விட்டார் - இயேசு

5. மேகங்கள் நடுவினிலே
என் இராஜா வரப்போகிறார்
கரம் பிடித்து அழைத்துச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார் - இயேசு

பாடல் 9

உம்மை நோக்கிப் பார்க்கிறேன் } 2
உம்மை நினைத்து துதிக்கின்றேன்
இயேசப்பா ஸ்தோத்திரம் (4)

1. நீரே என் செல்வம் } 2
ஒப்பற்ற என் செல்வம்
உம்மில் மகிழ்கின்றேன் (2) - நான்
என்னை மறக்கின்றேன் (2)

2. கண்ணின் மணி போல } 2
என்னைக் காக்கின்றீர்
உமது நிழலிலே (2) - நான்
என்னை மறக்கின்றேன் (2)

3. வாழ்வின் பாதையை } 2
எனக்கு காட்டுவீர்
உமது சமூகமே (2) - தினம்
எனக்கு தீபமே (2)

4. உலகம் வெறுக்கையில்
நீரோ அணைக்கின்றீர்
உமது அணைப்பிலே அந்த
வெறுப்பை மறக்கின்றேன்

பாடல் 10

வருத்தப்பட்டு பாரம் சுமப்பவரே
வருவீர் இயேசுவண்டை இளைப்பாற

1. தாகமுள்ளவரே வாரும் என்றார்
தாகத்தோடு வரும் சமாரியாளைக் கண்டார்
தண்ணீர் கேட்டார் அவர் தாகம் தீர்த்தார்
பாவ மன்னிப்பை யடைந்து மகிழச் செய்தார் -வருத்தப்

2. பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி இருந்தாள்
கடும் நோய் நீங்க பலரிடம் சென்றாள்
நம்பிக்கை இழந்தாள் நாதன் இயேசுவைக் கண்டாள்
நடுங்கி வஸ்திரம் தொட்டு சுகமடைந்தார் - வருத்தப்

3. நாலு நாளாயிற்றே நாறும் என்றாள்
நம்பிக்கை விடாதே அவன் பிழைப்பான் என்றார்
கவலைப்பட்டார் இயேசு கண்ணீர் விட்டார்
மரித்தவன் உயிர்த்தே வரச்செய்தார் - வருத்தப்

4 நாடு நகரங்கள் சுற்றி அலைந்தார்
நானே வழி வேறில்லை எனப் பகர்ந்தார்
களைப்படைந்தார் அத்தி மரத்தைக் கண்டார்
கனியற்றிருப்பதைக் கண்டு சபித்தார் - வருத்தப்

பாடல் 11

இயேசு ஏன் பிறந்தார்
ஏழை கோலமதாய்
பாவியை மீட்க பாசமாய்
பாரினில் வந்தாரே
உன்னதத்தில் மா மகிமை
இந்த பூமியிலே சமாதானம்
மனிதர் பேரிலே பிரியமும்
இன்றும் என்றும் உண்டாவதாக

1 பாவ சேற்றினிலே
பாழும் மண்ணுலகினிலே
மாய இன்பத்திலே மனிதன்
புரள்வது ஏன்?
தேவன் நம்மேல் கொண்ட
அன்பால் தாரணிமீதில்
நம்மைத்தேடி வந்த இயேசுவிடம்
தஞ்சம் அடைவாய் - இயேசு

2. சோதனைக்காரன் சாத்தானோ சங்காரன்
அவனை அழித்திடவே இயேசு
அவனியில் பிறந்தார்
சோதனை நிறைந்த வாழ்வில்
சோர்ந்திடும் மாந்தர்
பொல்லா பிசாசை வென்ற இயேசு
பாதம் நம்பிவா - இயேசு

3. இம்மை வாழ்வினிலே
இம்மானுவேல் துணையே
இன்னல் மத்தியிலே இவர்
நம்முடன் உண்டே
காரிருளில் துன்ப வாழ்வில்
கர்த்தர் நம் ஜோதி
ஒளி வீசும் பாதை செல்வோம்
இயேசுவின் பின்னே

பாடல் 12

ஜப் ஸே ப்யாரா யீசுஆய
மேரா ஜீவன் பெதல் கயா (2)

ஜப் ஸே மேம் னே உஸே ஹே பாயா
மேரா ஜீவன் பெதல் கயா (2)

1. இஸ் ஜஹான் கீ கந்தகீ ஸே முச்ஜேச்சுடாய
ஆசா தே கர் மூச்சே குணா ஹோம்ஸே ஹை பகாயா
இஸ்லியே மேராமன் மேரி காயா (2)
மேரா ஜீவன் பெதல் கயா

2. மேரி ராஹோம் மேம் ன காம்டே அப்ரஹேம்கே
மேரி மம் ஜில் மேம் ன மாதம் அப்ரஹேம்கே
ஹோ காயா தூர் ஹை மௌத் கா ஸாயா (2)
மேரா ஜீவன் பெதல் கயா

3. ராத் காலி பீத் கயி ஹை ஹூ ஆ ஸவேரா
ஸுபஹ் கா தாரா தேத்கோ சம்கப யீசு மேரா
இஸ்லியே மேம் னே யஹ் கீத் காயா (2)
மேரா ஜீவன் பெதல் கயா

பாடல் 13

Jesus Jesus teach me
How to walk with you
Jesus Jesus teach me
How to live for you

Jesus Jesus tell me
How to pray to you
Jesus Jesus tell me
How to speak to you

Jesus Jesus show me
How to do Thy will
Jesus Jesus hear me
With thy patience now

பாடல் 14

1. தாவீது போல நடனமாடி
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் - 2
இயேசப்பா ஸ்தோத்திரம் - 4

2. என்ன வந்தாலும் ஏது வந்தாலும் — அப்பாவை
3. பரிசுத்தாவியில் நிறைந்து நானும் — அப்பாவை
4. ஜெபத்திலே நான் விழித்திருந்து — அப்பாவை

பாடல் 15

ஒரு குப்பி தைலத்தின் நறுமணத்தை
ஒரு குட்டி செத்த ஈ நாறச் செய்யுமே
ஒரு குடம் பாலில் ஓர் துளி விஷமே
தவறிப்பட்டாலும் எல்லாம் கெடுமே

ஒரே ஒரு ஜீவியம் உலகினிலே
ஒரே தேவன் இயேசுவோழைத்திடவே
பரிசுத்த வாழ்வில் ஓர் சிறுபாவமே
பரமனே உன்னின்று பிரித்திடுமே

பாடல் 16

பரலோகத்தின் பனித்துளிகள்
என் மேல் பெய்யட்டும்
தாகமுள்ள எந்தன் ஆத்துமாவில்
வாரும் தூய ஆவியே
முற்றும் ஆட்கொள்ளும்
பெய்யும் பரலோகத் தூரலால்

பாடல் 17

ஓ தேவனே அதிகாலையில் தேடுவேன்
என் இருதயம் பூரிப்பாய் உம் மகிமை காணுவேன்

1. மலர்ந்த லீலிப்போல் உம்முகமே ஜொலிக்குதே
திரண்ட செல்வமே உம்மில் மகிழுவேன் - ஓ
2. இரவில் தேடியும் கண்மூட இமைகளே
பகலிலும் தேடுவேன் என் நேசர் முகத்தையே - ஓ
3. உம் திறந்த கைகளும் கிருபை பொழியுமே
தாழ்மை உள்ளமே அதை ஏற்க பருவமே - ஓ
4. சுகந்த கண்ணீரும் என் சுயத்தின் வாசனை
பறந்த உள்ளத்தால் களிப்பாக்கும் தேவனே - ஓ
5. பாலும் தேனுமே உம் உதடில் பொழியுமே
பாயும் இன்பமே என் பாரம் நீங்குமே - ஓ